## 33 அட்டமாசித்திஉபதேசித்தபடலம்

ஒரு சமயம் சிவபெருமான் போக மூர்த்தியாய் இருக்கும் போது, சிவகணத் தலைவர்களுக்கும், சனகர் சகோதரர்களுக்கும் சிவபுராணங்களை  கூறிக் கொண்டிருந்தார். அருகில் முருகப் பெருமானுக்கு பால்கொடுத்துக் கொண்டிருந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும்தங்களுக்கும் அட்டமா சித்திகளை  உபதேசித்து அருள வேண்டினர்.

பராசக்தியாய் எங்கும் நிறைந்திருக்கும் உமாதேவியை எப்பொழுதும் சிந்திக்கும்படிக் கூறினார். அவர்களின் ஊழ்வினையின் வலிமையால் உமாதேவியை சிந்திக்காமல் ஐயன் அருளிய மந்திரத்தை மறந்தனர்.

இதனை அறிந்த சிவபெருமான் சினந்து அப்பெண்களை பட்டமரங்கள் போல் தங்களது அழகு, ஐஸ்வர்யம் இழந்து பட்டமங்கை என்னும் தலத்தில் ஆலமரத்தின் கீழ்ப் பாறையாகக் கிடக்க சபித்தார். மனம் தளர்ந்த பெண்கள் தங்கள் சாபம் தீருவது எப்பொழுது என வினவ, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் மதுரையிலிருந்து தாமே வந்து அவர்கள் சாபத்தை நீக்கி அட்டமா சித்திகளையும் ஓதுவதாக கூறியருளினார்.

சிவகங்கை மாவட்டத்தில் இன்றும்  பட்டமங்கை  என்னும் தலத்தில் அவர்கள் பாறைகளாக கிடைப்பதாக கூறுகின்றனர்.

ஆறுபெண்களும் ஆயிரம் வருடங்கள் ஆலமரத்தடியில் பாறையாகக் கிடந்தனர். அவர்கள் சாபத்தை தீர்ந்திட திருவுள்ளம் கொண்ட ஐயன் அவர்களின் சிரசின் மீது   தம் திருக்கையை வைத்து அட்டமா சித்திகளை உபதேசித்தார். அட்டமா சித்திக்கள் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை அடையும் மார்கமாகும்.  கார்த்திகைப் பெண்கள் உமாதேவியை தியானித்து அட்டமாசித்திகளைப் பயின்று கயிலாயம் அடைந்தனர்.

**பல்லவி**

அட்டமா சித்தி தன்னையே கார்த்திகை பெண்களுக் கோதி
அன்னையை சிந்தித்து சித்தி அனைத்தையும் அடையச் செய்தாய்

**அனுபல்லவி**

தணியாத கோபம் கொண்டு அன்னையை நினையாத
அறுவரை பட்டமங்கலத்தனில் கீழ்க் கல்லாக்கினீர்

**சரணம்**

ஆயிரம் ஆண்டிற்குப் பின் அகந்தை நீங்கி தூய்மை
அடைந்திடவே அவர்கள் முன் ஞான ஆசானாயத் தோன்றி
தாயின் தயவுடனே நீயும் அவர்களின்
தலை மீது கைவைத்து ஓதியருளினீர்